RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21445

OPEN ACCESS

# கொங்கு வட்டாரத்தில் அனுமன் திருத்தலங்கள்

க. திவ்யா [அ, *], அர. ஜோதிமணி [அ]

[அ] தமிழ்த் துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு - 638004, இந்தியா

# Anuman Temples in the Kongu Region

G. Dhivya [a, *], R. Jothimani [a]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode – 638004, India

* Corresponding Author: gdhivya.erd@gmail.com

Received: 23-05-2021
Revised: 28-09-2021
Accepted: 11-10-2021
Published: 30-10-2021

**ABSTRACT**

According to many researchers, Kongu Nadu has been recognized as a historically significant region since ancient times, similar to the Chola and Pandya kingdoms. During the Sangam period, Kongu Nadu was established as an independent nation. The unique features of Kongu Nadu are described in a text called Kongu Mandala Sadhakam. It is evident that major religious traditions such as Shaivism, Vaishnavism, Jainism, Islam, and Christianity, along with many small deity worship practices rooted in local customs, were prominently present in Kongu Nadu. The temples of Thirumal and Hanuman in this area indicate that Vaishnavism thrived here. This article focuses on the worship of Hanuman, which began as a household deity in the large deity temples of Kongu Nadu and later developed into dedicated temples for worship.

**Keywords:** Kongu Region, Anuman Temples, Worship, Kingdoms

## முன்னுரை

கொங்குநாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே பழங்காலத்தில் இருந்தே வரலாற்றுச் சிறப்புடைய நாடாக விளங்கியிருப்பதை ஆய்வாளர்கள் பலரும் எடுத்தியம்பியுள்ளனர். சங்ககாலத்தில் கொங்கு நாடு தனிநாடாக திகழ்ந்திருக்கின்றது. கொங்கு நாட்டின் சிறப்புகளை கொங்கு மண்டல சதகம் எனும் நூல் விளக்குகிறது. சமய நிலையில் சைவம், வைணவம், சமணம், இஸ்லாம், கிருத்துவம் போன்ற பெருஞ்சமய நெறிகளும் நாட்டார் மரபிலான சிறு தெய்வ வழிபாடுகள் பலவும் கொங்கு நாட்டில் சிறப்பாக இடம் பெற்றிருந்ததை அறியலாம். இங்குள்ள திருமால் கோயில்களும் அனுமன் கோயில்களும் வைணவம் இப்பகுதியில் சிறப்புற்றிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இக்கட்டுரை சிறு தெய்வ வழிபாட்டு மரபிற்கும் பெருஞ்சமய நெறிக்கும் இடைப்பட்ட பெருந்தெய்வ கோவில்களில் பரிவார தெய்வமாக இருந்து பிறகு தனி கோயில் அமைத்து வழிபடப்பட்டு வரும் தெய்வங்களில் அனுமன் வழிபாட்டை குறிப்பாக, கொங்கு நாட்டில் அமைந்துள்ள அனுமன் திருத்தலங்களை ஆராய்வதாக அமைகிறது.

## நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில்

கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த 24 நாடுகளில், நாமக்கல் வாழவந்தநாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் நாமகிரி எனும் பெயரில் புண்ணிய தளமாக

விளங்கியது. புராணங்களில் ஸ்ரீசைல சேத்திரம் என்ற பெயரில் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் திருச்செங்கோட்டில் அமைந்துள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயில் தேவாரத்தில் திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்னும் பெயரில் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற சைவ தலமாக விளங்குகின்றது. இங்குள்ள ஆஞ்சநேயர் கோயில் தமிழகத்தில் இருக்கும் பிற ஆஞ்சநேயர் கோயில்களை விடவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## புராண சிறப்பு

இராமாயண காலத்தில், இராம இராவண யுத்தத்தில் இராமனின் படைகளை இராவணனின் மகனான இந்திரஜித் தன் வலிமையான பிரம்மாஸ்திரத்தால் தாக்க, இராம லக்ஷ்மணர்கள் மயக்கம் அடைகிறார்கள். இதைக்கண்ட இராவணனின் தம்பி விபிடணன், இவர்களது மயக்கம் தெளிய சஞ்சீவி மூலிகை கொண்டு வர வேண்டும் அம் மூலிகை மலை வடபகுதியில் ஓரிடத்தில் இருக்கின்றது. அம் மூலிகையை கொண்டு வர அனுமன் ஒருவனால் தான் முடியும் என்று கூறுகிறார். எனவே அனுமன் வட பகுதிக்குச் சென்று மூலிகை உள்ள மலையை கண்டடைந்து அம்மலையை அப்படியே அடியோடு பெயர்த்துக்கொண்டு இலங்கைக்கு வருகிறார். இராம இலட்சுமணர்களும் பிற படை வீரர்களும் அம்மலையிலிருந்த மூலிகையின் மகத்துவத்தால் மயக்கம் தெளிந்து போர் மேற்கொண்டு இராவணனை வதம் செய்கின்றனர். போர் முடிந்த பிறகு சமுத்திரக்கரையில் இருந்த இச்சஞ்சீவி மலையை இராம இலக்மணர்கள் பார்த்து, இம்மலை இங்கு எப்படி வந்தது என்று அனுமனிடம் கேட்க, அனுமன் இந்திரஜித்தின் பானத்தால் நீங்கள் மூர்ச்சை அடைந்தீர்கள் இம்மலையில் உள்ள அற்புத மூலிகையால் தான் மூர்ச்சை தெளிந்து இராவணனை வதம் செய்தீர்கள் என்று கூற, இராம இலக்மணர்கள் இம்மலையை அது இருந்த இடத்திலேயே வைத்து விட்டு வரும்படி அனுமனிடம் கூறினார்கள். அதன்படி அனுமன் அந்த மலையை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு வந்தார். அவ்வாறு வரும் வழியில் கண்டகி என்னும் நதியில் நீராடும் போது அங்கு திருமாலின் திருவுருவாகிய சாளக்கிரமக்கல் ஒன்று கிடைக்கப்பெற்றார். சாளக்கிரமக்கல் நடுவே ஒரு துளையை பெற்றிருக்கக்கூடிய திருமாலின் அம்சமான மிகவும் சக்திவாய்ந்த கல்லாகும். இக்கல் வடபகுதியில் மட்டுமே அரிதாகக் கிடைக்கின்றது. மிகவும் அகமகிழ்ந்து அச்சால கிராமக்கல்லை தன்னோடு ஆகாயம் மார்க்கமாக எடுத்து வருகிறார் அனுமன்.

வரும் வழியில் சூரிய உதயத்தின் வருகையை அறிந்து பூஜை செய்வதற்காக நாமக்கல் திருத்தளத்தில் இறங்குகிறார். அங்கு பிரகலாதனுக்காக இரணியனை வதம் செய்த நரசிம்ம அவதாரத்தை தரிசிப்பதற்காக திருமகள் எம்பெருமானை நோக்கி கமலாலய குலத்தில் கடுந்தவம் புரிகிறாள். ஆஞ்சநேயர் தன்னிடம் இருந்த சாலகிராமக்கல்லை திருமகள் கரங்களில் கொடுத்து தான் அனுஷ்டானம் செய்துவிட்டு பிறகு பெற்றுக் கொள்வதாகவும் அதுவரை அக்கல்லை கீழே வைத்து விட வேண்டாம் என்றும் கூறிச் செல்கிறார். திருமகள் அக்கல்லின் பாரம் தாங்காமல் கீழே வைத்து விட அது நாமகிரி மலையாக உருவாகிவிடுகிறது.

அனுமன் திரும்பி வந்து தாயாரிடம் சாலகிராமத்தை கேட்க, கனம் தளாமல் கீழே அதனை வைத்து விட்டேன் நீ பலம் வாய்ந்தவன் தானே எனவே நீயே அதனை எடுத்துக் கொள் என்று அனுமனிடம் கூறுகிறார். அனுமன் தன் வாளால் அம்மலையை எடுக்க

முற்பட அக்கல்லை அவரால் எடுக்க இயலவில்லை. அப்பொழுது நரசிம்மமூர்த்தி அவருக்கு தரிசனம் தந்து நான் தான் இம்மலையாக இருக்கின்றேன். என்னை நாடிவரும் பக்தர்களுக்கு என் எதிரே நின்று நீயும் அருள் பாலிப்பாயாக என்று கூற அனுமனும் இன்றும் அவ்வாறே நமக்கு அருளி வருகிறார். (இந்துசமய அறநிலையத்துறை., 2014)

## நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பிற அனுமன் கோயில்கள்

நாமக்கல் மாவட்டத்தில் இன்னும் சில இடங்களில் அனுமன் கோயில்கள் கட்டப்பட்டு வழிபாடுகளும் திருவிழாக்களும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. பெரியப்பட்டி அனுமந்தராய சாமி கோயில், லத்துவாடி அனுமந்த்ராய சாமி கோயில் முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவை இரண்டும் 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்கள் ஆகும். இக்கோயில்கள் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இரு கோயில்களிலும் ஒரு கால பூஜை நடைபெறுகின்றது. (இந்துசமய அறநிலையத்துறை., 2014)

## தாராபுரம் அருள்மிகு காடு அனுமநதராயசுவாமிகள் திருக்கோயில்

தாராபுரம் கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் தென்பொங்களூர் நாடு, காங்கேய நாடு, தென்கரை நாடு முதலிய நாடுகளின் சில பகுதிகளை உள்ளடக்கியதாகும். ஈரோட்டில் மூன்று வருவாய் கோட்டங்களில் தாராபுரமும் ஒன்று. தாராபுரம் வட்டத்தில் காங்கேயமும் அடங்கும். தாராபுரம் வட்டத்sதில் உத்தமசோழபுரம், கம்புளியம்பட்டி, காசிரங்கம்பாளையம், கொங்கல் நகர், சாலையூர், தாயம் பாளையம், பிரமியம், புளியம்பட்டி, பொன்னாபுரம், பொன்னிவாடி போன்ற ஊர்களும் காங்கேய வட்டத்தில் அகிலாண்டபுரம், அரசம்பாளையம் எருக்கங்காட்டுவலசு, கல்லேரி, கோவில்பாளையம், வட்டமலை, மேட்டுக்காட்டுவலசு, காமாட்சிபுரம், குமாரபாளையம், காடையூர் முதலிய ஊர்களும் அடங்கும்.

## தல சிறப்பு

இத்தளத்தில் பஞ்சபாண்டவர்கள் சுற்றித்திரிந்ததாக கூறப்படுகின்றது. மகாபாரத கதையில் எவரும் அறியாமல் பஞ்சபாண்டவர்கள் சன்னியாசிகளாக சுற்றித் திரிந்ததாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறு சுற்றித்திரிந்த இடங்களில் இத்தலமும் ஒன்று. மத்தவர்கள் குளத்தின் வழித்தோன்றல்களில் ஒருவரும் தீவிர அனுமபக்தருமான வியாசராயர் இந்தியா முழுவதும் அமைத்த 732 ஆஞ்சநேயர் கோயில்களில் 89 ஆவது திருக்கோயில் இது என்பது இக்கோயிலின் சிறப்பாகும். இப்பகுதி காட்டுப் பகுதியாக இருப்பதால் இறைவன் காடு அனுமந்தராய சுவாமி என்ற திருப்பெயருடன் விளங்குகின்றார். பொதுவாக சீதாராமர் திருக்கோயில்களில் மூலமூர்த்தியாக சீதாராமர் இருக்க உற்சவமூர்த்தியாக ஸ்ரீ ஆஞ்சநேயர் இருப்பது வழக்கம். ஆனால் இங்கு ஏழடி உயரத்தில் மூலமூர்த்தியாக ஆஞ்சநேயர் வீற்றிருக்கிறார் என்பது இத்தளத்தின் தனிச்சிறப்பாகும்.

## கோவை ஆட்சியர் டீலன் துறை செய்த திருப்பணி

1810 கோவையில் மாவட்ட ஆட்சியராக இருந்த டீலர் துறைக்கு முதுகில் ராஜபிளவை என்ற கட்டி ஏற்பட்டு மிகவும் அவதிப்பட்டதாகவும் ஒருமுறை தாராபுரத்திற்கு வருகை புரிந்த போது இங்குள்ள மக்கள் அவரை ஆஞ்சநேயரை வழிபட அழைத்ததாகவும் ஆஞ்சநேயரின் அருளால் டீலன் துறைக்கு அந்நோய் விலகியதாகவும் கூறப்படுகின்றது. தன் பிணியை போக்கிய ஆஞ்சநேயருக்கு நேர்த்திக்கடனாக அழகிய கருவறை ஒன்றை அவர் கட்டித் தந்ததாகவும் கூறப்படுகின்றது.

## அத்தாணி பஞ்சமுக ஆஞ்சநேயர் தலசிறப்பு

சில ஆண்டுக்கு முன் இப்பகுதியில் வாழ்ந்த மூதாட்டியின் பேரன் உடல்நலக் குறைவால் படுத்தப்படுக்கையாக இருந்தான் மூதாட்டியின் கனவில் ஆஞ்சநேயர் பஞ்சமுகங்களுடன் தோன்றி 'உன் பேரன் விரைவில் குணமடைவான் நீ கலங்காதே' என்று சொல்லி மறைந்தார். கனவில் வந்த ஆஞ்சநேயரை மூதாட்டி வணங்கி வந்தாள், சில நாட்களிலேயே பேரன் உடல் நடமடைந்தான்.

மூதாட்டியும் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் தனது கனிவையும், ஆஞ்சநேயர் அருளியதையும் கூற, 'ஆஞ்சநேயகருக்காக பிரம்மாண்ட சிலையை செய்து கோயில் ஒன்றையும் அமைக்க வேண்டும்' என்ற எண்ணம் சிலரது மனதில் தோன்றியது அடுத்தடுத்த நாட்களில் பணமும், சிலை செய்யத் தேவையான பொருட்களும் நன்கொடையாகக் குவியத் தொடங்கின. 35 அடி உயரமுள்ள பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலை 2½ ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டது.

## அருள்மிகு அனுமனீசுவரர் திருக்கோயில்

அனுமன் வழிபட்டதால் அனுமனீசுவரர் என்ற திருநாமங் கொண்டு, ஈசுவரர், சதுர பீடத்தில் எழுந்தருளியுள்ளார். இராம யணக் கதையையொட்டி அமைந்த தல வரலாறு. இராமபிரான் சிவபக்தர்களை வதம் செய்த தோஷம் நீங்க, பல இடங்களில் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டுள்ளார். அவரது சேனையில் முக்கிய அங்கம் வகித்து அனுமனும், சுக்ரீவனும் நிறுவிய சிவலிங்கத் திருமே னிகள் கொங்குநாட்டில் பல இடங்களில் உள்ளன. அவற்றில் ஒன்று தான் முகாசி அனுமன்பள்ளி.

'ஜேஷ்டாதேவி' சிலை திருக்கோயிலில் இடம் பெற்று இதன் பழமை க்கு சான்றுரைக்கிறது. மும்மூர்த்திகளின் சிறிய புடைப்புச் சிற்பம் உள்ளது. வெளிச்சுற்றில் விநாயகர், முருகப் பெருமான், அன்னை அன்னபூரணிக்குத் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

சிவாலயம் அருகிலேயே அழகுசொக்கப் பெருமாள் ஆலயமும் உள்ளது. அலர்மேலு மங்கை தனிச்சந்நிதி கொண்டுள்ளார். மூலவர் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். ஆஞ்சநேயர் சந்நிதியும், கருடத்தம்பமும் உள்ளன. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது. (ஐ.எஸ்.மதி, 2021).

## கோயமுத்தூர் வடவள்ளி ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர்

பக்தர் ஒருவரின் தியானத்தில் தோன்றி, தனக்கு ஆலயம் அமைக்கச் சொன்ன 'ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயரை' கோவை வடவள்ளியில் தரிசிக்கலாம்.

## இக்கோயில் உருவானது வரலாறு

ஆஞ்சநேய பக்தரான சுவாமிஜி ஒருவர், ஆறு மாதங்களுக்கு மேலாக கடும் விரதமிருந்து உபாசனை செய்த தன் பயனாக ஆஞ்சநேயர் ஒரு சித்ரா பௌர்ணமி அன்று அவருக்கு அருள்பாளித்தார்.

அவரது தியானத்தில் தோன்றி தனக்கு ஐந்து முகங்கள், பத்து கரங்களுடன் கூடிய ஒரு சிலை வடித்து ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யுமாறு உத்தரவிட்டார். அத்துடன் கோயில் எப்படி அமைய வேண்டும் என்பதையும் விளக்கினார்.

ஆஞ்சநேயரின் உத்தரவுப்படி சிலை செய்ய செங்கல்பட்டு அருகே உள்ள திருமுக்கூடல் மலையில் ஒரு கல்லைத் தேர்வு செய்தனர். அக்கல்லை திருவான்மியூருக்குக் கொண்டுவந்து திருவோண நட்சத்திர தினத்தில் சிலை வடிக்கும் வேலையைத் தொடங்கினார். அதே வேளையில் கோயில் கட்டுவதற்கான இடத்தைத் தேடி அலைந்து மைலாப்பூரில் ஓர் இடத்தைத் தேர்வு செய்தனர்.

மாதங்கள் ஆறு ஆகியும் அவ்விடத்தை கோயிலுக்காக வாங்க முடியவில்லை. சிலையும் முடியும் தருவாயில் இரந்த நிலையில் சுவாமிஜி ஆஞ்சநேயரிடம் உத்தரவு கேட்க, 'தமக்கு சென்னையில் இடம் இல்லை, கோவையில் தான் பிரதிஷ்டை செய்ய வேண்டும், அதவும் மருத மலைக்குச் செல்லும் வழியில் உள்ள ஓர் இடம் தான் கோயில் அமைக்க ஏற்ற இடம். அந்த இடத்தையும் பக்தர் ஒருவர் மூலமாக நானே அடையாளம் காட்டுகிறேன்' எனக்கூறி மறைந்தார்.

அவ்வாறே பக்தர் ஒருவர் சுவாமிஜியை சந்தித்து அந்த இடத்தைக் காட்ட, ஆஞ்சநேயரின் உத்தரவு பெற்று ஆலயம் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சென்னையில் இருந்து கோவைக்கு சிலை கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், ஆஞ்சநேயர் அமர்ந்த இடத்தின் பெயர் 'ஸ்ரீராம நகர்" என்ன ஒற்றுமை பார்த்தீர்களா?

## பஞ்சமுக தரிசன பலன்

| | | |
|---|---|---|
| அனுமன் | : | சனித் தொல்லையை நீக்கி, சகல தோஷங்களையும் நீக்குவார் |
| நரசிம்மர் | : | பயத்தைப் போக்கி துஷ்ட தேவதைகளை அடக்குவார் |
| கருடர் | : | அனைத்து வியாதிகளை நீக்குவார் |
| வராகர் | : | செல்வத்தைப் பெருக்கி பாவங்களைப் போக்குவார் |
| ஹயக்ரீவர் | : | கலை, படிப்பு, வாக்கு சாதுர்யத்தைத் தருவார். |

## அஷ்டாம்ச ஸ்ரீ வரத ஆஞ்சநேயர்

இவர் கோயமுத்தூரில் அவினாசி சாலையில் பீளமேட்டில் உள்ள ஆலயத்தில் அமைந்து அருளுகிறார். மார்கழி மூலத்தில் மலரங்கி, தை மாதப் பிறப்பில் கரும்புவனக் கோலம், ராஜ அலங்காரம், பழக்காப்பு, வெண்ணெய்க் காப்பு, செந்தூரக் காப்பு, பத்தாயிரத்து எட்டு வடைகாப்பு, பச்சைத் திருமேனி, முத்தங்கி சேவை என அன்பர்கள் விரும்பிய வண்ணம் திருக்கோலம் காட்டுகிறார்.

எட்டு விசேஷமான குணங்களைக் கொண்டு விளங்கும் அனுமன்

1) வரம் கொடுக்கும் திருக்கரம்
2) இடக்கையில் இடர் தீர்க்கும் கதாயுதம்
3) மேற்கு நோக்கிய திருமுகம்
4) யமபயம் போக்கும் தெற்கு நோக்கிய பாதங்கள்
5) குபேரனுடைய திசையான வடக்கு நோக்கிய வால்
6) சிவ அம்சமே அனுமான் என்பதற்கிணங்க சிவலிங்கத்தினுள் அமைந்த திருஉரு.
7) அனுமனுடைய திருக்கரத்தில் அமர்ந்தருளும் திருமகள்
8) எந்த இடத்திலிருந்து (எங்கிருந்து) தரிசித்தாலும் அருவொளி பொழியும்

திருவிழிகள் அனைத்தும் ஒருங்கே தொண்டவர் அஷ்டாம்ச ஸ்ரீவரத ஆஞ்சநேயா (குமுதா சாந்தாராமன், 2020)

## அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் - வே.முத்தம்பட்டி தலச்சிறப்பு

இத்திருக்கோயில் அடர்ந்த வனப்பகுதியுடன் கூடிய மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இம்மலையில இராட்சதப் பாறைகளும், உயர்ந்த மரங்களும் காணப்படுகிறது. இம்மலையில் 70 அடி உயரத்தில் பாறையில் 8 அடி உயரத்தில் ஆஞ்சநேயர் சிலை சிறந்த வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. இத்திருக்கோயிலின் எதிர்ப்புறம் உள்ள செய்யப்பட்டுள்ளது. குன்றின் அடிவாரத்தில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## தனிச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வீரஆஞ்சநேயர் உருவம் பாறையில் புடைப்பு சிற்பமாக செதுக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலை ஒட்டி சலசலக்கும் சிற்றோடை ஒன்று செல்கிறது.

## அருள்மிகு சஞ்சீவராய சுவாமி திருக்கோயில் - தித்தியோப்பனஅள்ளி புராணச்சிறப்பு

இராவணனோடு இராமபிரானின் படையினர் போரிட்ட போது லட்சுமணன் மூர்ச்சையாகி விழ நேரிட்டது. ஜாம்பவானின், அரிய யோசனையை ஏற்று ஆஞ்சநேயர், சஞ்சீவி மூலிகையைத் தேடி வடக்கே புறப்பட்டார். அந்த அரிய மூலிகையை இனம் கண்டுகொள்ள இயலாத நிலையில் அந்த மலையையேத் தூக்கி வந்து சேர்ந்து இலட்சுமணனைக் காப்பாற்றினார். அதனால் சஞ்சீவராயர் எனும் புகழையும் அடைந்தார்.

அனுமர் தூக்கி வந்த சஞ்சீவி மலையின் துகள் ஒன்று இப்பகுதியில் விழுந்து அந்த துகள் இங்கு சஞ்சீவி மலையாக மாறியது என்பர். இம்மலைப்பகுதியில் சித்தர்கள் பலர் நள்ளிரவில் உலாவுவதாகவும் திருக்கோயிலுக்கு வடமேற்கில் உள்ள பூதகூண்டு எனும் குகையில் அவர்கள் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

## அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயில் - தருமபுரி

அருள்மிகு சாலைவிநாயகர் திருக்கோயிலுக்கு அருகில்அமைந்துள்ள இத்திருக்கோயிலானது சாலைவிநாயகர் திருக்கோயிலுக்கு இணையான தொன்மையைக் கொண்டுள்ளது. எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலில் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி அபயம் அளிப்பவராகவே காட்சி தருகிறார்.

## காட்டு வீர ஆஞ்சநேயகர் (கிருஷ்ணகிரி)

கிருஷ்ணகிரி தேவசமுத்திரம அருகே உள்ளது காட்டு வீர ஆஞ்சநேயர் கோவில் இந்தக் கோயிலில் மட்டைத் தேங்காய் முடிந்து வேண்டினால் நியாயமான வேண்டுதல்கள் உடனே நிறைவேறும் என்பது ஜாதகம்.

இந்த வேண்டுதல் 3 நாள், 3 வாரங்களில் உறுதியாக நிறைவேறும் இங்கு சனி மற்றும் ஞாயிறு மற்றும் அமாவாசை தினங்கள் விசேஷமானவை. இதனால் தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலுமிருந்து பக்தர்கள் வருகிறார்கள்.

அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில் - பாலாற்றங்கரை

பாலாற்றங்கரை" பொள்ளாச்சிக்குத் தென்மேற்கில் 12கி.மீ. தொலைவில் உள்ளது. இயற்கை எழிலுக்குப் பெயர் பெற்றது. பொள்ளாச்சிக்குப் பெருமை சேர்ப்பவை அதன் மண்ணவளமும், அதற்கு துணை நிற்கும் ஆழியாறும் பாலாறும் ஆகும். கடல்போல நீர் பெருகி ஓடுவதால் ஆழியாறு என்றும், நீரின் சுவை பாலை ஒத்து இருப்பதால் பாலாறு என்றும் அழைக்கப்பட்டிருக்கும். வால்பாறை செல்லும் சாலையில் சமத்தூர் நான்கு சாலை சந்திப்பைக் கடந்ததும், 1 கி.மீ தொலைவில் வலப்புறம் திருக்கோவிலின் வளைவு" நம்மை எதிர்கொண்டழைக்கிறது. தொலைவிலிருந்தே, பாலாற்றின் நீரில் தெப்பம் போல் அழகாகக் காட்சியளிக்கிறது திருக்கோயில்.சிற்றாறை கடந்து செல்ல பாதையும் அமைக்கப்பட்டு, இருபுறமும் சங்கிலிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பக்தர்கள் அச்சமின்றி ஆற்றைக் கடந்திட, பாதையின் நடுவே, இரும்புக் குழாய்களினால் செய்யப்பட்ட "கிராதி யும் உள்ளது.

தென்திசை நோக்கி தென் இலங்கையில் சீதாபிராட்டியை தரிசித்துவிட்டு. சூடாமணியுடன் ராமபிரானிடம் திரும்பி வந்தபோது, முதலில் அவரை வணங்காமல், தென்திசை நோக்கித் தான் வணங்கினான் சொல்லின் செல்வன் ஆஞ்சநேயன். அதனை உணர்த்தும் வகையிலே, பாலாற்றங்கரையில் அமைந்துள்ள திருக்கோயிலிலும் ஆஞ்சநேயசுவாமி தெற்கு திசை நோக்கியபடி அருள்பாலிக்கிறார்.

ஆற்றின் கரையில் பாறையில் இயற்கையாகவே பாறையிலே அமைந்தசுவாமி வாயுபுத்திரன் வடிவம் அமைந்துள்ளது ஆஞ்சநேயசுவாமியின் திருவுருவம். தலைக்கு மேலே வந்து கரத்தைத் தூக்கியபடி "அஞ்சேல்" எனஅபயம் அளித்திடும் கோலம்.

தன்னைப் பணிவோரின் துயர்களைத் துள்துளக்கிவிடும் கதாயுதம் இடது கரத்தில், வாலை உயர்த்தித் தூக்கியபடி மணியோசையையும் எழுப்பிய வண்ணம், சீதாதேவியிடமிருந்து பெற்ற சூடாமணியை வலது தோளில் தொங்கும் துணியில் கொண்டபடி வலதுகாலை முன்வைத்து காட்சி தருகிறார்.

## புராணச்சிறப்பு

"வானவீதியில்" அனுமன் வரும்போது, இம்மலையின் குறுக்கே வர நேர்ந்ததாம். இராமபிரானின் பாதச்சுவடுகளை இங்கே கண்டபோது. அவற்றை உற்றுநோக்கிட கீழே குனிந்து பார்க்க, அனுமனின் நிழலே,பாறையில் சிலை வடிவமானது என்கின்றனர் அனுமன் தாசர்கள்.

அந்தச் சிலை வடிவில் பின்னே ஒரு அழகிய கோயிலை எழுப்பி, ராமரின் பாதங்களையும், ஒரு ஐந்தடி உயர ஆஞ்ச நேயசுவாமி சிலையையும் எழுப்பினர்.

## ராமர்பாதம்

ராமபிரானின் பாதச்சுவடுகள் தானே அனுமனை பாலாற்றங்கரைக்கு இட்டு வந்தன எனவே அழகிய ராமர் பாதம் விமானத்துடன் கூடிய மண்டபத்தில், பின்புறம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆஞ்சநேயசுவாமியின் இடதுபுறம் விநாயகப்பெருமான் உள்ளார். உச்சிக்காலத்தில். சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது. சனிக்கிழமைகளில் விழாக்கோலம் காண்கிறது பாலாற்றங்கரை. -வெள்ளிக்கவசம்" அணிந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார் ஆஞ்சநேயர்.

## அருள்மிகு அனுமந்தராய சுவாமி திருக்கோயில் - இடுகம்பாளையம் கோவில் அமைவிடம்

கோவை மாவட்டம், சிறுமுகையிலிருந்து கிழக்கே 6கி.மீ. தொலைவில் உள்ளது இடுகம்பாளையம்.ஆறு அடி உயரம், ஐந்து அடி அகலம் உள்ள ஒரே பாறையில் கம்பீரமாகத் நேர் பார்வை கொண்டவராக.ஜெயமங்கள ஆஞ்சநேயர் அருள் பாலிக்கும் திருத்தலம். 650ஆண்டுகளுக்கு முன்னர், விஜயநகர மன்னர்கள் காலத்தில்உருவான திருக்கோயில் இது. அருகிலேயே ராமலிங்கேசுவரர் திருக்கோயிலும் உள்ளது. பொதுவாக ஆஞ்சநேயர் இடதுபுறமாகவோ அல்லது வலதுபுறமாகவோ நின்றபடி, சஞ்சீவி மலையைத் தாங்கியபடியோ, அல்லது கதாயுதத்தை பிடித்தபடியோ காட்சி தருவார். ஆனால் இடுகம்பாளையத்தில், நேர்கொண்டபார்வையுடன் அருள்பாலிப்பது தனிச்சிறப்பு.

## ஆஞ்சநேயர் திருக்கோலம்

உள்ளத்தைத் கவரும் கண்களும், முத்துப்பற்கள் வரிசையும் புன்முறுவலுடன் கூடிய இதழ்களும், உருண்டு திரண்ட தோள்களிலும், நெற்றியிலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் திருமண் காப்பும், உருண்டு திரண்ட கணுக்கால்கள், அழகிய முழங்கால்களும் சிறப்பம்சமானவை சௌகந்திக மலரை இடக்கரத்தில் தாங்கியபடியும். அஞ்சேல் என

**வலக்கரத்தை உயர்த்தியும் பக்தர்களுக்கு அபயம் அளிக்கும் திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.**

## முடிவுரை

**கொங்கு நாட்டின் சமய வரலாற்றை நோக்கும்பொழுது, இங்கு அறுசமயப் பிரிவுகளும், அவற்றிள் தத்துவங்களும் மிகச் சிறப்பாக இருந்திருக்கின்றன. கொங்கு நாட்டில் அனுமன் வழிபாட்டின் பரவலாக்கம் விஜயநகர பேரரசர்களின் காலத்தில் அதிகம் காணப்படுகிறது. கொங்கு நாட்டு பகுதிகளான ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, திண்டுக்கல், நீலகிரி, சேலம், கரூர் முதலிய பகுதிகளில் அனும வழிபாடு வெகு சிறப்பாக இருப்பதையும் அக் கோயில்களில் நாள்தோறும் பூசைகள், வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறுவதையும் சில முக்கிய தினங்களில் திருவிழாக்கள் கொண்டாடப்படுவதையும் அறிய முடிகின்றது.**

## References


Hindu Religious Endowments Department., (2014) Temple Guide, Tamil Nadu Government Hindu Religious Endowments Department Publication, Namakkal

I.S.Madhi, (2021) Anjaneyar Thalangal, Aruna Publishing House, Chennai.

Kumudha Shantaraman, (2020) Anjaneyar, Aruna Publishing House, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License